28th March 1959]

Disposal of cases in the High Court, Madras

*1048 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா —

(அ) சென்னை ஹைகோர்ட்டில் 1957 ஏப்ரல் முதல் 1958 மார்ச் முடிய தாக்கல் செய்த வழக்குகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் எத்தனை முடிவு செய்யப்பட்டன ? எத்தனை முடிவு செய்யவில்லை ?

(இ) கீழ் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்து ஹைகோர்ட் வரை வந்து மூன்றாண்டுகளுக்கு மேலாக எத்தனை வழக்குகள் முடிவு செய்யப் படாமல் இருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) to (*c*) A statement [a] is placed on the table of the House.

Sri K. VINAYAKAM : From the statement placed on the table of the House it is evident that the civil cases are pending for longer time than is absolutely necessary. Is the Hon. Minister aware of the fact that delayed justice almost amounts to denied justice and will the Government issue instructions to the persons concerned to dispose of the cases as early as possible avoiding the dilatory tactics adopted by the clients who do not feel much about these cases?

Mr. SPEAKER : Only the last portion of the question is relevant.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தாமதமின்றி வழக்குகள் தீர்க்கப்படவேண்டும் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். கூடியவரை ஹைக்கோர்ட்டிலாகட்டும், மற்ற கோர்ட்டுகளிலாகட்டும் தாமதமின்றித்தான் வழக்குகள் தீர்க்கப்பட்டு வருகின்றன என்று சொல்லக் கூடும். க்ரிமினல் வழக்குகளைப் பொறுத்தமட்டில் தாமதம் என்பதே கிடையாது. சிவில் வழக்குகளைப் பொறுத்தமட்டில் கொஞ்சம் தாமதம் இருக்கிறது. அது தவிர்க்க முடியாத தாமதம். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல், சில சமயங்களில் கட்சிக்காரர்களே வாய்தா கேட்கிறார்கள். அதனாலும் தாமதம் ஏற்படுகிறது. அவை எல்லாவற்றையும் மறுப்பதற்கில்லை. இருந்தாலும் ஹைகோர்ட்டார் கவனம் செலுத்தி, இந்த வழக்குகளெல்லாம் துரிதமாகத் தீர்க்கப்படுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டு தான் வருகிறார்கள்.

Sri S. M. ANNAMALAI : மேஜை மீது வைக்கப்பட்ட அறிக்கையைப் பார்க்கும்போது, ஏறத்தாழ 1030 ரிட் பெட்டிஷன்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆண்டுக்கு ஆண்டு ரிட் பெட்டிஷன்கள் அதிகமாகிக் கொண்டிருப்பதால், அதற்கென்றே தனியாக ஒரு ஜட்ஜ் போடுவதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்கு ஒன்றும் அவசியம் இல்லை. ரிட் பெட்டிஷன்கள் துரிதமாகவே தீர்க்கப்பட்டு வருகின்றன.

Import of Cattle from Punjab State

* 1053 *Q.*—Sri S. PAKKIRISAMI PILLAI (on behalf of Sri N. K. PALANISAMI) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாப் ராஜ்யத்திலிருந்து ஏராளமான கால்நடைகளை இறக்குமதி செய்யும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானால், அதற்கான காரணங்கள் யாவை ?

---

a Printed as Appendix VIII on pages 821–823 infra.